13th February 1958]

SRI V. K. RAMASWAMY MUDALIYAR : Recently I saw in the papers that we are getting some foreign aid for the improvement of the new harbour. Is this also included in our plan ?

THE HON. SRI C. SUBRAMANIAM : That is a Central scheme. It is not included in the State Plan.

SRI K. ANBAZHAGAN : சென்னை ராஜ்யம் தொழில் துறையில் பின்தங்கிக் கிடக்கிறது என்ற கருத்தை எடுத்துச் சொல்கிற நம்முடைய அமைச்சர்கள் முதலில் இரண்டாவது ஐந்தாண்டு திட்டத்திலே கேட்ட தொகையில் எவ்வளவு கொடுக்க மத்திய அரசாங்கம் சம்மதித்துள்ளது? இப்பொழுது கொடுத்திருப்பதைவிட எவ்வளவு அதிகத் தொகை வேண்டுமென்று கேட்டார்கள்.

THE HON. SRI C. SUBRAMANIAM : Sir. I do not think I can answer this question in the form of question and answer.

ஆகையால் பட்ஜெட் விவாதத்தின்போது இதைப்பற்றி விரிவாக விவாதித்துக்கொள்ளலாம், தொழில் துறையில் நாம் இங்கு என்னென்ன தொழில்கள் ஏற்பாடு செய்யவேண்டுமென்று வற்புறுத்தினோமோ அவைகளை எல்லாம் ஏற்படுத்த எல்லா முயற்சிகளும் நடந்துக்கொண்டிருக்கின்றன.

SRI S. NAGARAJA MONIGAR : திட்டமிட்ட அளவில் இருந்து குறைக்க குறிப்பிட்டிருப்பது நம் மாகாணத்திற்கு மாத்திரந்தானா? பொதுவாக எல்லா மாகாணத்திற்கும் இந்த நிலை ஏற்பட்டிருக்கிறதா ?

THE HON. SRI C. SUBRAMANIAM : நம் மாகாணத்திற்கு ஏற்பட்டிருக்கக்கூடிப் நிலைமைபற்றி நாம் திருப்தி அடையக்கூடிய நிலையில்தான் இது அமைந்திருக்கிறது என்று தெரிவித்துக்கொள்கிறேன். ஆகவே, மற்ற மாகாணங்கள் சென்னைக்கு அதிகமாகக் கொடுத்துவிட்டார்களே என்று ஒரு சர்ச்சையைக் கிளப்பும் முறையில் நாம் இதை எடுத்துக் கொள்ளவேண்டாம்.

SRI N. K. PALANISAMI : அலுமினியம் தொழிற்சாலை ஏற்படுத்துவது சம்பந்தமா உத்தேசிக்கப்பட்ட திட்டம் என்னவாயிற்று ? அது ஏன் சேர்த்துக்கொள்ளப்படவில்லை ?

THE HON. SRI C. SUBRAMANIAM : அதைப்பற்றி தொழில் அமைச்சர் அவர்கள் பதில் சொன்னார்கள். இதைப் பற்றி நாம் அதிகம் விவாதிக்கவேண்டுமென்றால் பட்ஜெட் வருகிறது. அப்பொழுது இதைப் பற்றி விரிவாக விவாதிக்கலாம்.

Honorary Bench Court at Tindivanam

* 97 *Q.*—SRI M. S. SELVARAJAN (on behalf of Sri S. A. M. Annamalai Odayar : Will the Hon. the Minister for Home be pleased to state—

(*a*) whether the Honorary Bench Court at Tindivanam is to be reconstituted:

(*b*) if so, why; and

(*c*) whether any petition has been received from the Honorary Magistrates of Tindivanam objecting to the reconstitution?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (*a*) Yes, Sir.

(*b*) Because the Court as previously constituted has not been functioning properly.

(*c*) Yes, Sir, after orders have been issued abolishing the Court and withdrawing the powers.

Sri A. GOVINDASAMY : பழைய கோர்ட்டுகள் சரியான முறையில் வேலை செய்யவில்லை என்றால் புதிதாக புதிய அங்கத்தினர்களைக்கொண்ட கோர்ட்டுகள் நியமிக்க சர்க்கார் முயற்சிக்குமா ?

The Hon. Sri M. BHAKTAVATSALAM : மீண்டும் அங்கத்தினர்களை நியமித்து கோர்ட்டு அமைக்கப்படும்.

Sri M. JAGANNATHAN : பழைய கௌரவ மாஜிஸ்ட்ரேட் கோர்ட்டு சரியாக வேலை செய்யவில்லை என்பதற்கு காரணம் என்னவென்று அமைச்சர் கூறுவார்களா ?

The Hon. Sri M. BHAKTAVATSALAM : மாஜிஸ்ட்ரேட்களுக்கும் தலைவருக்கும் தகாறுகள் இருந்தன. கலெக்டர் இதையெல்லாம் பரிசீலனை செய்து இந்த கோர்ட்டை அபாலிஷ் செய்யவேண்டுமென்று சிபாரிசு செய்ததின்படி அது அபாலிஷ் செய்யப்பட்டிருக்கிறது.

Mr. SPEAKER : Question Nos. 98, 99, 100—இவைகளை ஒன்றாக எடுத்துக் கொள்ளலாம்.

Medical Colleges

* 98 *Q*.—Sri V. K. KOTHANDARAMAN : Will the Hon. the Minister for Revenue be pleased to state—

(*a*) the number of students admitted into the Christian Medical College, Vellore, North Arcot district, from 1955 to 1957;

(*b*) the number of non-Christians among them; and

(*c*) the amount of grant given to this college?

The Hon. Sri M. A. MANICKAVELU : (*a*) & (*b*) The Christian Medical College is a private institution and the Government have therefore no information.

(*c*) No grant is given by the Government to the college.

Sri A. A. RASHEED : Is the college run by the Christian Mission open to all communities?

The Hon. Sri M. A. MANICKAVELU : Yes. It is open to all communities. But more Christians are admitted. That is the complaint.

Mr. SPEAKER : I am sorry I have to interrupt. Let the Hon. Minister read the answer for all the three questions. Then we can have supplementary questions.

The Hon. Sri M. A. MANICKAVELU : This particular question is different.

Sri K. VINAYAKAM : Is there any possibility for the Government to compel this institution, though it does not get any grant from this Government, to take in sufficient number of students belonging to other communities than Christians?

The Hon. Sri M. A. MANICKAVELU : Till 1952–53, the Government were giving grant. They have stopped it now. Only that much could be done.